உலக ஜெப நாள்

மார்ச் 1, 2019

'ஸ்லொவெனியா'

கருப்பொருள் : 'வாருங்கள் – எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது'

வேத ஆராய்ச்சி : லூக்கா 14 : 15 - 24

உவமையின் பின்னணி

விருந்து ஒரு கொண்டாட்டம். யூதர்களுக்கு, பகிர்ந்து கொள்ளப்படும் உணவு மிகவும் தனிப்பட்டதாகவும், நெருக்கமானதாகவும், நட்புமிக்கதாகவும், மக்களுடன் ஒரு இணைப்பு கொள்ள கூடியதாகவும் உள்ளது. ஒருவருடன் உணவு கொள்வது அவருடன் ஒருமனமாய் இருப்பதை காட்டுகிறது.

இயேசுவின் போதனை மற்றும் பணிகள் அனைத்தும் தேவனுடைய ராஜ்யத்தின் விருந்தின் அழைப்பை ஏற்று கொள்வதையும் அந்த விருந்துக்கு ஆயத்தப்படுவதையும் காட்டியது.

- பூரணமான வாழ்க்கைக்கான அழைப்பு.

பவுலும் நற்கருணை பந்தியை பற்றி பேசினார். இறையியலின்படி, நாம் ஏற்கனவே நற்கருணையாகிய அர்ப்பணிக்கப்பட்ட இந்த பந்தியில் பங்கு கொள்கிறோம்.

லூக்கா 14:23: "ஜனங்களை உள்ளே வரும்படி வருந்தி கூட்டிக்கொண்டுவா"

இதில் "வருந்தி" என்ற வினைச்சொல் "இல்லை" என்று மறுக்கப்பட இயலாத விருந்தோம்பல் வகையை குறிக்கிறது.

உவமையின் விளக்கம்

இந்த உவமையில் இயேசு கிறிஸ்து அளவற்றதும் சிறந்ததுமான விருந்தை மக்களுக்கு ஆயத்தம் பண்ணினதை காண்கிறோம். இதில் உணவும், அவருடைய சாயலில் நம்மை நிரப்புகிறதும், உருவாக்குகிறதும், புதுபிக்கிறதுமான அப்பமும் இருக்கிறது. இந்த வேதப்பகுதியில் தேவன் தாழ்தப்பட்டவர்களாகிய 'மூடன், ஏழை, ஊனமுற்றோர்' ஆகியோருக்கு கிருபை புரிந்தார். அவர்கள் இந்த விருந்துக்கு எதிர்பாராத விதமாக அழைக்கப்பட்டார்கள். அதைப்போலவே தேவனுடைய நற்செய்தியும் நாம் எதிர்ப்பார்க்காத வேளையில் நம்மை வந்து சேர்ந்து ஆச்சரியப்படுத்துகிறது.

நாம் அனைவரும் விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம், ஆனால் இந்த அழைப்புக்கு நாம் மறுமொழி கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

தேவனுடைய வார்த்தையாகிய விருந்துக்கு மற்றவர்களை அழைப்பதே நமது நோக்கமாகும்.

லூக்கா சுவிசேஷத்தின் இந்த பகுதியில், கிறிஸ்தவர்களாகிய நாம் விருந்தோம்பல் செயல்களில் இருந்து விலகிவிடக் கூடாது என்பதை வலியுறுத்துகிறது. நாம் அன்போடு அழைப்பை வலியுறுத்த வேண்டுமென இயேசு விரும்புகிறார்.

அழைக்கப்பட்டவர்களிடமிருந்து இல்லை என்ற பதிலை நாம் ஏற்காமலும் அவர்களை கட்டாயப்படுத்தாமலும் 'வீடு பூர்த்தி செய்யப்படும்வரை' தொடர்ச்சியான அழைப்பை கொடுக்க வேண்டும்.

குழு விவாதங்களுக்கான கேள்விகள்

1. ஒருவர் விருந்துக்கு விருந்தினர்களை அழைக்கும்போது விருந்தினர்கள் முக்கியமான அல்லது அவசர காரியங்களைக் கொண்டிருப்பதாக அறிவித்தால் அந்த நபர் எப்படி உணர்ந்திருப்பார் என்று நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? இந்த நிராகரிப்பை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா? எப்படி உணர்ந்தீர்கள்? இத்தகைய சூழ்நிலைக்கு நீங்கள் எப்படி பிரதிபலித்தீர்கள்?

2. ஆண்டவர் இந்த விருந்துக்கு நம்மை அழைக்கிறார். நாமும் இந்த விருந்தில் பங்கு கொள்ளாதப்படிக்கு பல காரணங்களை கொடுக்கக்கூடும். நீங்கள் கொடுத்த காரணங்களை நினைத்து பாருங்கள். அனைவருக்கும் திறந்து கொடுக்கப்பட்டுள்ள இந்த விருந்தில் நீங்கள் எப்படி பங்கு கொள்ளமுடியும்?

3. வர மறுக்காத விருந்தினர்களில் நீங்களும் ஒருவர் என்று கற்பனை செய்து பாருங்கள். வீட்டிற்கு வந்தவர்களில் அனைவரும் அந்நியர்களாக இருக்கிறார்கள்: ஏழைகள், முடவர்கள், குருடர்கள் (லூக்கா 14:13). உங்களுடைய சமூதாயத்தில் யார் இருக்கிறார்கள்? அவர்களுடன் எப்படி உறவு கொள்வீர்கள்?

4. தேவனுடைய ராஜ்யத்தின் நற்செய்தியை இயேசு தம் மக்களுக்கு விருந்தோம்பலின் வழி அறிவித்தார். நீங்கள் யாரோடு விருந்து கொள்கிறீர்கள்? உங்கள் விருந்து மற்றவர்களுக்கு திறந்து கொடுக்கப்பட்டுள்ளதா?

5. லூக்கா 14: 15-24ஐ மௌனமாக வாசிக்கவும், புதிய விருந்தாளிகளை கண்டுபிடிக்க அனுப்பிய தூதர் வந்திருந்தால் நீங்கள் யாரை அழைப்பீர்கள் என்று யோசித்து பாருங்கள். வீடற்றவர்களையும், பிச்சைக்காரர்களையும், தெருக் குழந்தைகளையும் அழைக்கிறீர்களா?

ஜெப குறிப்புகள்:

1. ஸ்லொவெனியா தேசத்தின் கிறிஸ்தவர்கள் திருச்சபைகளுக்கு வெளியே தேவனை குறித்து சாட்சி கொடுக்கவும் பணிசெய்யவும் ஜெபியுங்கள்.

2. ஸ்லோவேனியாவில் உள்ளவர்கள் இயேசுவின் நாமத்தினால் விடுதலை அடைய ஜெபியுங்கள்.

3. கிறிஸ்துவர்கள் சபை ஊழியங்களை ஆதரிக்கவும் உதவவும் ஜெபியுங்கள்.

4. பெயரளவிலான, மதச்சார்பற்ற விசுவாசிகள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட ஜெபியுங்கள்.

5. வாலிபர்கள் இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை கேட்கவும், உலகத்தின் பின் செல்லாமல் தேவனுக்கு பின் செல்லவும் ஜெபியுங்கள்.